முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம், அரியலூர்.

**O.S.No. 10/2022**

**நாள்: 14.03.2023**

**வா.சா.1 சாந்தி என்பவர் ஆஜர். பிரமாணம் செய்யப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டதன்பேரில் வாதி தரப்பில் முதல் விசாரணை தொடரப்பட்டது.**

07.10.2003 தேதியிட்ட என் பெயரிலான தான செட்டில்மெண்ட் பத்திரம் வா.த.சா.ஆ.10 ஆகவும், அந்த சொத்திற்கான பட்டா எண்.883 வா.த.சா.ஆ.11 ஆகவும், சொத்திற்கு நான் செலுத்திய வரி ரசீது வா.த.சா.ஆ.12 ஆகவும், என் தாயார் பெயரிலான 14.08.1972 தேதியிட்ட கிரைய பத்திர அசல் வா.த.சா.ஆ.13 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் எட்டாம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு எப்போது திருமணமானது என்று ஞாபகமில்லை. என்னுடைய திருமணம் பெற்றோர் ஏற்பாடு செய்யப்பட்டு செய்த திருமணம். என் அம்மா தற்போது உயிருடன்தான் இருக்கிறார். என் அம்மா பெயரில் இருந்த சர்வே எண்.209/3ஏ சொத்து 1 ஏக்கர் 36 செண்ட் என் பெயரில் உள்ளது என்றால் சரிதான். இந்த சொத்தை முதல் பிரதிவாதி கடனுக்கு பிணையமாக என் அம்மா எழுதி கொடுத்தார் என்றால் சரியல்ல. பாசத்தின் காரணமாக எழுதிக் கொடுத்தார். பாசத்தின் காரணமாக எழுதிக் கொடுத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 2003ல் என் கணவர் வெளிநபரிடமிருந்து முதல் பிரதிவாதியான என் தகப்பனாருக்கு வாங்கிக் கொடுத்த கடனுக்கு என் கணவர் கேட்டுக் கொண்டதன்பேரில் என் பெயருக்கு என் தாயார் பிணையமாக செட்டில்மெண்ட் பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. என் தகப்பனார் என் கணவர் வாங்கி கொடுத்த கடனையும் 2005ம் வருடத்தில் அடைத்துவிட்டார் என்றால் சரியல்ல. கடன் பைசல் செய்த பிறகும் மகள் என்பதால் செட்டில்மெண்ட் பத்திரத்தை ரத்து செய்யாமல் வைத்திருந்தார்கள் என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதிக்கு திருமணமாகவில்லை என்றால் சரிதான்.

அவர் குடிபோதைக்கு அடிமையாகி வீட்டிலேயே இருப்பார் என்றால் சரியல்ல, அவர் குடிப்பதில்லை. அவர் குடித்துவிட்டு வந்து அடிக்கடி முதல் பிரதிவாதியிடம் பாகம் மற்றும் பணம் கேட்டு தகராறு செய்து வந்தார் என்றால் சரியல்ல. 60 ஆண்டுகளுக்கு முன்பே தாவா சொத்துக்கள் பொறுத்து என் அப்பா சாமிதுரைக்கும், பெரியப்பா தங்கவேலுக்கும் பாகம் பிரிக்கப்பட்டுவிட்டது என்றால் சரிதான். பாகம் பிரிக்கப்பட்டதில் சாமிதுரைக்கும், தங்கவேலுக்கும் பிரச்சனை ஏதுமில்லை என்றால் சரிதான். பாகத்தில் வழக்கு சொத்து முதல் பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்டு அவருடைய சுயாஜித சொத்தாகிவிட்டது என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதிக்கு சொத்தில் பாகம் ஏதுமில்லை என்றாலும், குடும்ப நலன் கருதி என் அப்பா பாகம் பிரிப்பதற்கு ஒப்புக் கொண்டார் என்றாலும் சரியல்ல. அப்போது செட்டில்மெண்டை நான் ரத்து செய்ய முடியாது அந்த சொத்துதான் எனக்கு பாகமாக வேண்டும் என சொன்னதால் அந்த சொத்து எனக்கு பாகமாக ஒதுக்கப்பட்டு செட்டில்மெண்ட் ரத்து செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. எனக்கு செட்டில்மெண்ட் செய்யப்பட்ட சொத்து செண்ட் ஒரு லட்சம் போகும் என்றால் சரியல்ல, ரூ.50,000/— போகும். 2015ல் குடும்பத்தில் பாகம் பிரிக்கப்பட்டு செட்டில்மெண்ட் சொத்து எனக்கு ஒதுக்கப்பட்டும், ஏனைய சொத்துக்கள் 1, 2, 3 பிரதிவாதிகளுக்கு வாய்மொழியாக ஒதுக்கிக் கொள்ளப்பட்டது என்றால் சரியல்ல. அம்மாதிரி வாய்மொழி பாகமாக ஒதுக்கப்பட்ட சொத்தினை முதல் பிரதிவாதி 29.11.2021 மற்றும் 16.12.2021 தேதிகளில் 4, 5 பிரதிவாதிகளுக்கு தானசெட்டில்மெண்ட் பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. 31.05.2017, 21.11.2020 ஆகிய தேதிகளில் 2, 3 பிரதிவாதிகளுக்கு தானசெட்டில்மெண்ட் எழுதிக் கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. குடும்பத்தில் எனக்கான பாகத்தை நான் வாங்கிக் கொண்டு தற்போது அதனை மறைத்து பாகம் கோரி வழக்கு தவறாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எனக்கு அனுபவம் இல்லாத நிலையில் கூட்டு அனுபவம் என பொய்யான விபரங்களை சொல்லி மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சொத்து முழுவதும் முதல்

பிரதிவாதியின் தனிப்பட்ட சொத்து என்பதால் அதில் நான் பாகம் கோர முடியாது என்பதால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**(முதல் பிரதிவாதியின் குறுக்கு விசாரணை 3 முதல் 5 பிரதிவாதிகளால் ஏற்றுக் கொள்ளப்படுகிறது)**

**மறுவிசாரணை – இல்லை.**

(ஒம்)செல்வி.எஸ்.மகாலெட்சுமி,
முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
அரியலூர்.